08.08.2017

தினமலர்

**வேளாண் திட்டங்களுக்கு நிதி பெற முயற்சி**

மத்திய அரசின் வேளாண் திட்டங்களுக்கான நிதி உதவியை பெறும் முயற்சிகளை , தமிழக வேளாண் துறை துவக்கி உள்ளது. வரும் , 2022க்குள், நாடு முழுவதும் விவசாயிகளின் வருமானத்தை , இரண்டு மடங்கு அதிகரிக்க , மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக , மாநில வேளாண் துறையுடன் இணைந்து , தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் , தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் , பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் உள்ளிட்ட , பல்வேறு திட்டங்களை , மத்திய வேளாண் துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்கு தேவையான நிதியை பெற , தமிழக வேளாண் துறை அதிகாரிகள், முயன்று வருகின்றனர்.

இது குறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: குறுவை சாகுபடி பருவ காலம், ஜூனில் துவங்கியது. பயிர் காப்பீடு மானியம் வழங்க , 4,664 கோடி ரூபாய் ; அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்திற்கு , 333 கோடி ரூபாய் ; வேளாண் இயந்திர மயமாக்கல் திட்டத்திற்கு , 416 கோடி ரூபாயை , இந்த பருவத்திலேயே செலவிட, மத்திய அரசு முடிவு செய்து உள்ளது.

இந்த செலவினங்களுக்கான தொகையைப் பெற , மாநில வேளாண் அதிகாரிகள் குழு , விரைவில் டில்லி செல்ல உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

- நமது நிருபர் –

**மேட்டூர் நீர்மட்டம் 40 அடியாக உயர்வு**

மேட்டூர்: கர்நாடக அணைகளில் திறக்கப்பட்ட நீரில் , ஒரு பகுதியான , 7,000 கன அடி நீர், தொடர்ச்சியாக, மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதற்கேற்ப , மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

நேற்று அணை நீர்மட்டம் , 40.08 அடியாகவும், நீர் இருப்பு , 12.13 டி.எம்.சி.,யாகவும் உயர்ந்தது. வினாடிக்கு, 7,083 கன அடி நீர் வந்தது. பாசனத்துக்கு , 3,000 கன அடி நீர் திறக்கப்பட்டது. 29 நாட்களில், நீர்மட்டம், 20 அடி உயர்ந்துள்ளது.

**பழநி சந்தையில் தக்காளி விலை சரிவு:வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ25**

பழநி:வெளியூர்களில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால் , கடந்த வாரம் ரூ.60க்கு விற்ற தக்காளி , பாதியாக விலை குறைந்து ஒரு கிலோ ரூ. 25 முதல் விற்கப்படுகிறது. திண்டுக்கல் , ஒட்டன்சத்திரம், பழநி, உடுமலைபேட்டை, பொள்ளாச்சி பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்கின்றனர். இவை கேரளா , ஆந்திர பகுதிகளுக்கு ஒசூர் மார்க்கெட் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

மழை இல்லாததால் பழநி , ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வரத்து குறைந்து மார்க்கெட் மற்றும் உழவர் சந்தையில் கடந்த வாரம் ஒருகிலோ ரூ. 50 முதல் ரூ. 60 வரை விற்றது. தற்போது வெளியூர்களில் இருந்து ஒட்டன்சத்திரம் , பொள்ளாச்சி மார்க்கெட்களுக்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. எனவே ஒரே வாரத்தில் தக்காளி விலை பாதியாக வீழ்ச்சியடைந்தது. நேற்று ஒருபெட்டி ரூ. 300 முதல்(15கிலோ) ரூ. 400 வரை விலைபோனது. உழவர்சந்தை , மார்க்கெட்டில் ஒருகிலோ ரூ. 25 முதல் ரூ. 30வரை தரத்திற்கு ஏற்ப விற்பனையானது. இதனால் தக்காளி சாகுபடி செய்துள்ள பழநி விவசாயிகள் எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மேலும் தக்காளி விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கொடைக்கானல் கொய்மலர்கள்**



கொடைக்கானல்: திண்டுக்கல் மாவட்டம் , கொடைக்கானல் மேல்மலை கிராமங்களான கவுஞ்சி , மன்னவனூர், குண்டுப்பட்டி பகுதியில் 'கொய்மலர்' சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பசுமைக் குடில்கள் அமைத்து , அதில் கார்னேஷன் , லில்லியம், ஈடோபிமா, லிம்மோனியம், அகாபந்தாஸ் போன்ற மலர்கள் வளர்க்கப்பட்டு பெங்களூரு உட்பட முக்கிய நகரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கொய்மலர் சாகுபடி: கவுஞ்சி , குண்டுப்பட்டி போன்ற பகுதிகளில் 25 ஏக்கரில் கொய்மலர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இவை தனியார் ஏஜென்ஸி மூலமாக பல நகரங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

அலங்காரம், பொக்கே தயாரிப்புக்கு இந்த மலர்களே அதிகம் பயன்படுகின்றன.

தற்போது கொடைக்கானல் , ஊட்டி மலைப் பிரதேசங்களில் விளையும் கொய்மலர்களுக்கு வெளிநாட்டு சந்தைகளில் நல்ல கிராக்கி உள்ளது. இதனால் கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள

விவசாயிகளுக்கு, மத்திய அரசு பல்வேறு சலுகைகளை வழங்குகிறது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 1000 ச.மீ.,க்கு ரூ. 16 லட்சம் வரை கடனுதவி வழங்குகிறது.

நியூசிலாந்துக்கு ஏற்றுமதி: கொய்மலர்கள் உற்பத்தி செய்யும் விவசாய ஆலோசகர் மூர்த்தி கூறியதாவது: கொய்மலர்களுக்கு தற்போது வெளிநாட்டில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தற்போது விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் நிலச் சீர்த்திருத்தம் முதல் சந்தைப்படுத்துதல் வரை உதவி செய்யப் படுகிறது.

இதுவரை கொய்மலர்கள் , வியாபாரிகளால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. தற்போது விவசாயிகளே ஏற்படுத்தியுள்ள அமைப்பு மூலம் முதன்முறையாக நேரடியாக நியூசிலாந்துக்கு அனுப்பப்படுகிறது என்றார்.

**பட்டுவிடாமல் காக்கப்படுமா பட்டுத்தொழில்...**

ஆடைகளின் ராணி பட்டு என்பர். பட்டு புராணம் சுவாரஸ்யமானது. சீன இளவரசி சீ லீங் சீ , மல்பரி மரத்திற்கு கீழே அமர்ந்து தேனீர் அருந்துவது வழக்கம். பச்சை இலைகளாக இருந்த மல்பரி மரத்தின் இலைகளில் , குருவி முட்டை அளவுக்கு வெள்ளை நிறத்தில் உருண்டைகள் ஒட்டி கொண்டிருந்தன. அதை பார்த்த

இளவரசிக்கு ஆச்சரியம். மல்பரி மரத்தில் பூப்பூத்து காய்கள் தொங்குகின்றனவோ என எண்ணியபடி கோப்பையில் சூடான தேனீர் அருந்தி கொண்டிருந்தார்.

அவருக்கே தெரியாமல் மரத்தில் இருந்த வெள்ளை உருண்டை ஒன்று தேனீர் கோப்பைக்குள் விழுந்தது. தேனீரில் சூடு குறைவதற்காக சீனர்கள் உணவு சாப்பிடும் போது பயன்படுத்தும் இரண்டு மெல்லிய குச்சிகளை கோப்பைக்குள் விட்டு , இளவரசி கிளறினார். அப்போது குச்சிகளின் நுனிப்பகுதியில் வெள்ளை நிறத்தில் நூல் பந்து போல் சுற்றப்பட்டிருந்தது. பயந்துபோன இளவரசி தேனீரை கீழே கொட்டினார். அதில் மரத்தில் இருந்த வெள்ளை உருண்டை தேனீர் கோப்பைக்குள் இருப்பதை பார்த்தார். கிளறிய போது வெள்ளை உருண்டையில் மினுமினுக்கும் நூல் வெளியாகி இருக்க வேண்டும் என உறுதி செய்தார். வெள்ளை உருண்டையில் இருந்து மெல்லிய நூல் முழுவதையும் எடுத்தபின் , உள்ளே பழுப்பு நிறத்தில் புழு இருந்தது. உருண்டை ஒன்றில் இருந்து 800 மீட்டர் நீளத்திற்கு நூல் இருந்தது. இளவரசி , மரத்தில் இருக்கும் வெள்ளை உருண்டைகளை வேக வைத்து நூல் எடுக்க உத்தரவிட்டார். அந்த நூலில் இருந்து தயாரித்த ஆடையே 'பட்டு' என்றானது என பட்டு புராணம் குறித்து சீனா புட்டு புட்டு வைக்கிறது.



**தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பில்லை: வானிலை மையம்**




**சென்னை:** 'காற்றழுத்த தாழ்வு நிலை நீடித்தாலும் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பில்லை' என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இதுகுறித்து சென்னை வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்ததாவது:** ஆந்திராவிலிருந்து கன்னியாகுமரி வரையிலான கடலோரப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தில் மழை அல்லத இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். எனினும் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பில்லை. சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரத்தில் நகரின் சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு தெரிவித்தனர்.

தமிழக கடலோர பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது.